பாலவிளை குடிநீர் திட்டம்.

91—*வினா எண் 16870—திரு. டி. மணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்புரம் ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் விளவங்கோடு ஊராட்சியில் உள்ள பாலவிளை குடிநீர்த் திட்டத்தின் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்,

(ஆ) மேல்புறம் ஊராட்சி ஒன்றியம் பாலவிளை கிராமத்திற்கு ஏழு பொதுக் குழாய்கள் வழியாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது. தற்பொழுது குடிநீர் பற்றாக்குறை பிரச்சனை இல்லை.

திரு. டி. மணி: மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த பாலவிளை குடிநீர்த் திட்டம் அமுலாக்கப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். 1982-ல் கேட்கப்பட்ட கேள்வி இது. இடையிலே இத்திட்டம் செயலுக்கு வந்திருக்கிறது. ஆனால் இப்போது அமைச்சரவர்கள் தந்திருக்கிற தகவல் சரியான தகவல் அல்ல. இரண்டு மாதங்களுக்கு முன்னாலிருந்தே இத்திட்டம் செயல் படவில்லை. மோட்டார் ஸ்டாட்டர் என்று சொல்லப்படுகின்ற கருவியில் பழுது ஏற்பட்டிருப்பதால், இப்படிப்பட்ட சில காரியங்களினால், தண்ணீர் விநியோகம் முடக்கப்பட்டிருக்கிறது. இது பற்றி அதிகாரிகளோடு தொடர்பு கொண்டும் இதுவரையில் அது சீர்செய்யப்படவில்லை. அதை விரைவாக சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொள்கிறேன்.

அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கான வருங்கால வைப்புத் திட்டம்.

92—*வினா எண் 17033—திரு.ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ரப்பர் தோட்டங்களில் வருங்கால வைப்பு நிதி (Provident fund) திட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) அது யாரால் பராமரிக்கப்படுகிறது?